**Kanton St.Gallen**
**Amt für Soziales**

# coronahilfe.sg

கொரோனா நோய்ப்பரவல் காரணமாக தனிப்பட்ட அல்லது நிதிரீதியான பிரச்சினைகளில் சிக்கியுள்ள மக்களுக்கு தகுந்த ஆதரவை வழங்க செயின்ட் கேலன் மண்டலம் விரும்புகிறது. இந்த நோக்கத்திற்காக பரந்த அளவிலான ஆலோசனை மற்றும் நிதி உதவி கிடைக்கிறது.

## கொரோனா ஆலோசனையை பெற தகுதியுள்ளவர் யார்?

கொரோனா நோய்ப்பரவல் காரணமாக தனிப்பட்ட அல்லது நிதிரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் எவரும் நகராட்சியில் உள்ள ஒரு ஆலோசனை மையத்தை தொடர்பு கொள்ளலாம். www.coronahilfe.sg.ch எனும் முகவரியில் நீங்கள் வசிக்கும் நகராட்சியின் பொறுப்பில் உள்ள ஆலோசனை மையத்தைக் காணலாம், அதை நீங்கள் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

கொரோனா நோய்ப்பரவல் தொடர்பாக இல்லாமலும், செயின்ட் கேலன் மண்டலத்தில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் சமூக ஆலோசனைக்கு பெற உரிமை உண்டு. மண்டலத்தில் உள்ள சமூக ஆலோசனை மையங்களின் முழு விவரங்களை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை www.coronahilfe.sg.ch எனும் முகவரியில் காணலாம்.

## கொரோனா நிதி உதவி பெற தகுதியுள்ளவர் யார்?

கொரோனா நோய்ப்பரவலின் தொடக்கத்திலிருந்து குறைந்த வருமானம் பெற்று வந்த (எ.கா. வேலையின்மை அல்லது குறுகிய கால வேலை காரணமாக) செயிண்ட் கேலன் மண்டலத்தில் வாழும் மக்கள், அதன் காரணமாக தங்களின் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க முடியாதவர்கள் நிதி உதவி பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். நீங்கள் ஏற்கனவே சமூக பாதுகாப்பு சலுகைகளைப் பெறுகிறீர்கள் என்றால் (எ.கா. வேலையின்மை பலன் அல்லது கொரோனா-ஈஓ) நிதிரீதியான கொரோனா உதவியைப் பெறுவதும் சாத்தியமானது ஆகும்.

## கொரோனா நிதி உதவி பெற தகுதியற்றவர் யார்?

விண்ணப்பிக்கும் நேரத்தில் செயின்ட் கேலன் மண்டலத்தில் வசிக்காத நபர்கள் நிதிரீதியான கொரோனா உதவி பெற தகுதியற்றவர்கள் ஆவார்கள். சமூக உதவி பெறும் நபர்கள் மற்றும் AHV அல்லது IV ஓய்வூதியம் பெறும் நபர்களுக்கும் இவ்வுதவி பெறும் உரிமை இல்லை. ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறிய சொத்துக்களை வைத்திருக்கும் நபர்களும் (ஒற்றை நபர் Fr. 4,000.–, திருமணமான / இணைந்திருக்கும் ஜோடி Fr. 8,000.–, ஒவ்வொரு குழந்தைக்கும் கூடுதலாக Fr. 2,000.–, ஒரு குடும்பமாக அதிகபட்சம் Fr. 10,000–) தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

## நிதிரீதியான கொரோனா உதவிக்கான கோரிக்கையை நான் எப்படி, எங்கே சமர்ப்பிக்க முடியும்?

உங்கள் விண்ணப்பத்தை மின்னணு முறையில் அல்லது காகித வடிவில் நீங்கள் வசிக்கும் நகராட்சியின் சமூக நல அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். விண்ணப்ப படிவத்தை www.coronahilfe.sg.ch எனும் முகவரியில் காணலாம்.

## கொரோனா நிதி உதவி பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

கொரோனா நிதி உதவி ...
- நோய்ப்பரவல் தொடர்பான வருமான இழப்புகளைக் குறைக்கிறது.
- திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.
- உங்கள் குடியிருப்பு நிலையில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.
- வரி விதிப்புக்கு உட்பட்டது.

## அடிக்கடி கேட்கும் கேள்விகள்

### என் விண்ணப்பத்தை நான் எங்கே சமர்ப்பிக்கலாம்?

- உங்கள் விண்ணப்பத்தை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்
- உங்கள் விண்ணப்பத்தை காகித வடிவில் நீங்கள் வசிக்கும் நகராட்சியின் சமூக நல அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்
- நீங்கள் வசிக்கும் நகராட்சியின் பொறுப்பில் உள்ள ஆலோசனை மையங்களின் உதவியுடன் உங்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

### கொரோனா நிதி உதவிக்கான எனது தகுதி எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

நிதி கொரோனா உதவிக்கு நீங்கள் தகுதியுள்ளவரா என்பதை சரிபார்க்க, நீங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பப் படிவம் மற்றும் ஆவணங்களை பயன்படுத்தி உங்கள் அங்கீகரிக்கப்பட்ட செலவுகள் (வாழ்க்கைச் செலவுகள், வாடகை, தொழில்முறை செலவுகள் போன்றவை) உங்கள் தகுதியுள்ள வருமானத்துடன் (சம்பளம், குழந்தை படித்தொகைகள், ஜீவனாம்சம் போன்றவை) ஒப்பிடப்படுகின்றன. . இந்த ஒப்பீட்டில்  ஒரு பற்றாக்குறை கண்டறியப்பட்டால், உங்கள் வருமான இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு நீங்கள் நிதிரீதியான கொரோனா உதவி பெற தகுதிபெறுகிறீர்கள். விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கு முந்தைய கடைசி 12 மாதங்கள் பொருத்தமானவையாக கருதப்படும்.

### நான் சமூக உதவியைப் பெறுகிறேன். அப்படியிருந்தும் நான் நிதிரீதியான கொரோனா உதவிக்கு விண்ணப்பிக்கலாமா?

சமூக உதவி பெறுபவர்கள் தகுதியுள்ளவர்கள் குழுவை சேர்ந்தவர்கள் அல்ல. கொரோனா நிதி உதவி என்பது தற்போதுள்ள சமூக பாதுகாப்பு அமைப்புக்கான ஒரு குறைநிரப்பும் கருவியாகும்.

### நான் AHV அல்லது IV ஓய்வூதியத்தைப் பெறுகிறேன், மேலும் எனக்கு வருமான இழப்பும் உள்ளது. நிதிரீதியான கொரோனா உதவிக்காக நான் விண்ணப்பிக்கலாமா?

இல்லை. AHV அல்லது IV ஓய்வூதியத்தைப் பெறுபவர் என்ற வகையில், உங்கள் அனுமதிக்கக்கூடிய செலவுகள் உங்கள் அங்கீகரிக்கப்பட்ட வருமானத்தை விட அதிகமாக இருந்தால் உங்களுக்கு கூடுதல் சலுகைகள் கிடைக்கக்கூடும். இந்த நிலையில், செயின்ட் கேலன் மண்டலத்தின் சமூக காப்பீட்டு மையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளவும். www.svasg.ch/produkte/el/

### நான் சுயதொழில் செய்கிறேன். நான் நிதி கொரோனா உதவிக்காக  விண்ணப்பிக்கலாமா?

கொரோனா நிதி உதவி தனிப்பட்ட அவசரநிலைகளுக்கானது மட்டுமே. நடைமுறையில் உள்ள கொரோனா நடவடிக்கைகள் (ஊதிய இழப்பு) காரணமாக ஒரு சுயதொழில் செய்பவர் / சுயவேலை செய்பவர் என நீங்கள் இழப்புகளை சந்தித்தால், ஒரு தனியார் நபராக நிதி கொரோனா உதவி பெற நீங்கள் தகுதி பெறுவீர்கள். நிதிரீதியான கொரோனா உதவி மூலம் உங்கள் வணிகத்திற்கான கூடுதல் ஆதரவு கிடைப்பது சாத்தியமில்லை. செயின்ட் கேலன் மண்டலத்தில் உள்ள நெருக்கடி நிலை உதவி பற்றிய விரிவான தகவல்களை இங்கே காணலாம்: Kantonale Härtefallmassnahmen | sg.ch

### எனக்கு சொந்தமாக குடியிருப்பு சொத்து உள்ளது. இது ஒரு சொத்தாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா?

இல்லை. பணம் அல்லது பங்குகள் போன்ற குறுகிய காலத்தில் தீர்ந்து போகக்கூடிய சொத்துக்கள் மட்டுமே சொத்துகளாக எண்ணப்படுகின்றன. நீண்ட கால முதலீட்டு மூலதனம் அல்லது ரியல் எஸ்டேட் போன்ற பிற இணைக்கப்பட்ட சொத்துக்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

கடந்த சில மாதங்களில் எனது பில்கள் அனைத்தையும் என்னால் செலுத்த முடிந்தது, ஆனால் அதற்கான தொகையை நான் நண்பர்களிடமிருந்து

### கடன் வாங்கியே செலுத்தினேன். அப்படியிருந்தும் நான் கொரோனா நிதி உதவிக்காக விண்ணப்பிக்கலாமா?

ஆம் விண்ணப்பிக்கலாம். கொரோனா நிதி உதவிக்கான தகுதி உங்கள் வருமானம் மற்றும் தகுதியுள்ள செலவுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. கடன் வாங்கிய பணம் வருமானமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

### கலாச்சார பணியாளர்களுக்கு கோவிட் உதவியை நான் பெற்றுள்ளேன். அப்படியிருந்தும் நான் கொரோனா நிதி உதவிக்காக விண்ணப்பிக்கலாமா?

ஆம் விண்ணப்பிக்கலாம். இருப்பினும், நிதிரீதியான கொரோனா உதவிக்கான உங்கள் தகுதியை கணக்கிடும்போது மாநில அல்லது நிவாரண அமைப்புகளின் பிற ஆதரவு பங்களிப்புகள் வருமானமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆதரவு பங்களிப்புகளைப் பெற்றிருந்தாலும் உங்கள் அங்கீகரிக்கப்பட்ட வருமானம் உங்கள் தகுதியுள்ள செலவுகளை பூர்த்தி செய்யவில்லை என்றால், நீங்கள் நிதிரீதியான கொரோனா உதவி பெற தகுதி பெறலாம். கலாச்சாரத் துறையில் ஆதரவு பங்களிப்புகளைப் பற்றிய கூடுதல் தகவலை இங்கே காணலாம்: Coronavirus | sg.ch

### செயின்ட் கேலன் மண்டலத்தில் கொரோனா தொடர்பாக வேறு என்ன உதவி கிடைக்கிறது?

மேலும் தகவலுக்கு, www.coronahilfe.sg.ch எனும் முகவரியில் இடது பக்க பத்தியைப் பார்க்கவும்.